இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது; இரு பக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது; ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது; எலும்பு முட்டையும் மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது; உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது. படைப்பு எதுவும் கடவுளுடைய பார்வைக்கு மறைவாய் இல்லை. அவருடைய கண்களுக்கு முன் அனைத்தும் மறைவின்றி வெளிப்படையாய் இருக்கின்றன. நாம் அவருக்கே கணக்குக் கொடுக்க வேண்டும். (எபி 4: 12-13)

# கத்தோலிக்க நலவாழ்வு அறக்கட்டளை-திருத்தந்தை நிறுவினார்

**வத்திக்கான்:** 'நோயுற்றோரின் துன்பங்களைத் துடைக்கவும், அவர்களுக்கு நலம் வழங்கவும், கத்தோலிக்க திருஅவையில் உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு அமைப்புக்களுக்கு, உதவிகள் செய்யும்வண்ணம், கத்தோலிக்க நலவாழ்வு அறக்கட்டளை என்ற ஓர் அமைப்பை நான் உருவாக்குகிறேன்' என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கைப்பட எழுதியுள்ள ஓர் ஆணையறிக்கை, அக்டோபர் 6, கடந்த புதனன்று வெளியிடப்பட்டது.

உடலளவில் மிகவும் நலிவுற்றோரை கத்தோலிக்கத் திருஅவை எப்போதும் தன் இதயத்தில் தாங்கிவந்துள்ளது என்பதன் அடையாளமாக, இந்த அறக்கட்டளையை தான் நிறுவியுள்ளதாக திருத்தந்தை இந்த ஆணையறிக்கையில் எழுதியுள்ளார்.

இவ்வாண்டு செப்டம்பர் 29ம் தேதி, தலைமை வானதூதர்களான மிக்கேல், கபிரியேல், இரபேல் ஆகியோரின் திருநாளன்று, திருத்தந்தை கையொப்பமிட்டுள்ள இந்த ஆணையறிக்கையில், உலகெங்கிலுமிருந்து தனக்கு வந்துசேர்ந்த பல்வேறு விண்ணப்பங்களின் விளைவாக, கத்தோலிக்க நலவாழ்வு அறக்கட்டளையை தான் நிறுவியுள்ளதாக திருத்தந்தை கூறியுள்ளார்.

கத்தோலிக்க நலவாழ்வு அறக்கட்டளை, சட்டரீதியான அனைத்து அதிகாரங்களையும் தனிப்பட்ட முறையில் கொண்டுள்ள ஓர் அமைப்பாக, திருப்பீடத்தின் ஏனைய துறைகளைப்போல் ஒரு துறையாக செயல்படும் என்று திருத்தந்தை அறிவித்துள்ளார்.

திருஅவையின் சட்டங்களுக்கும், அரசின் சட்டங்களுக்கும் உட்பட்டு, இந்த அறக்கட்டளை செயலாற்றும் என்பதையும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த ஆணையறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளார்.

திருப்பீடத்தின் பாரம்பரிய சொத்துக்களை கண்காணிக்கும் APSA என்ற அமைப்பின்



தலைவராகப் பணியாற்றும் ஆயர் நுன்சியோ கலான்தினோ (Nunzio Galantino) அவர்களை, கத்தோலிக்க நலவாழ்வு அறக்கட்டளையின் தலைவராக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நியமித்துள்ளார்.

இவ்வாண்டு கோடை விடுமுறையின் போது, உரோம் நகரின் ஜெமெல்லி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை ஒன்றை பெற்றுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அம்மருத்துவமனையிலிருந்து ஜூலை 11-ம் தேதி வழங்கிய ஞாயிறு நண்பகல் மூவேளை செப உரையில், மக்களின் நலவாழ்வுக்கென கத்தோலிக்கத் திருஅவை ஆற்றும் பணிகளை உயர்வாகப் பேசிய வேளையில், அப்பணியில் ஈடுபட்டுள்ளோர் சந்திக்கும் நிதிப்பிரச்சனைகள் குறித்தும் பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், தமது மூவேளை இறைவேண்டல் உரையில், தங்களையே காத்துக்கொள்ள இயலாத வலுவற்றோர், வறியோர், குழந்தைகள் ஆகியோருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் இயேசுவை கோபம் கொள்ளச் செய்கின்றன என்று நினைவுறுத்திய திருத்தந்தை, "இறையாட்சியைச் சிறு பிள்ளையைப்போல் ஏற்றுக் கொள்ளாதோர் அதற்கு உட்படமாட்டார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" (மாற்கு 10:15) என்று இயேசு கூறியதை எடுத்துரைத்தார்.

ஒருவர் தன் எளிய நிலையை உணர்ந்து கொள்வது, அவர் உன்னத நிலையை அடைவதற்கு முதல் படி என்று கூறிய திருத்தந்தை, நம் தேவைகளில் கடவுளையும் பிறரையும் நாம் சார்ந்திருக்கிறோம் என்பதை உணரும் தருணமே, நம்மை மேன்மையடையச் செய்யும் முதல் படி என்று வலியுறுத்திக் கூறினார்.

நம் தேவைகள் மற்றும் சக்தியற்ற நிலையில் நாம் இயேசுவைக் கண்டுகொள்ள முடியும் என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அதற்குப் பதிலாக, நம் சக்தியற்ற நிலையை மறைப்பதற்கு சக்தி மிகுந்தவர் போன்ற முகமூடிகளை அணிந்துகொண்டு வாழ்வது மேலும் பல பிரச்சனைகளை உருவாக்கும் என்று எடுத்துரைத்தார்.

*ஜெரோம் லூயிஸ் - வத்திக்கான் செய்திகள்*

## திருஇருதய ஆண்டவர் பங்கில் இடைநிலை மாணவர்களுக்கு சிறப்பு திருப்பலி

**கோலாலம்பூர்:** கடந்த செப்டம்பர் 18, சனிக்கிழமை அன்று கோலாலம்பூர் திரு இருதய ஆண்டவர் ஆலயத்தைச் சேர்ந்த படிவம் 2, 3 மற்றும் 4 சேர்ந்த மறைக்கல்வி மாணவர்களுக்கு இயங்கலை வழி (GOOGLE MEET) தமிழ் திருப்பலி கொண்டாட்டம் நிறைவேற்றப்பட்டது. இத்திருப்பலி அருள்பணியாளர் எட்வின் பீட்டர் மற்றும் அருட்சகோதரர் கேப்ரியல் புவன் உதவியுடன் மாலை 7.00 மணிக்கு சிறப்பாக கொண்டாடப்பட்டது. இத்திருப்பலியில் பங்குபெற்ற அனைத்து மறைக்கல்வி மாணவர்களும் சிறப்பான இறை ஆசிரைப் பெற்றனர். கடந்த சில மாதங்களாக ஆலய திருப்பலி நடத்தப்படாத சூழ்நிலையில் இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது. இதில் பங்கு பெற்ற மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இத்திருப்பலி மிகவும் மனநிறைவை அளித்தது, இந்த முயற்சி தங்களின் விசுவாச வாழ்க்கைக்கு மிகவும் உறுதுணையாக இருப்பதாக அவர்கள் கூறி மகிழ்ந்தார்கள்.

*-அன்னம்மா மைக்கேல்*




## "திருஅவையின் 'பொதுத்தன்மை" 2023 ஆயர் மாமன்றம் குறித்து ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் உரை



கோவிட் -19 தொற்றுநோயின் அழிவுகளிலிருந்து உலகம் மீண்டு வரும் நிலையில், திருஅவையின் வாழ்க்கை மற்றும் பணிக்கான 2023 ஆண்டு கூடவுள்ள ஆயர் மாமன்றத்தை நோக்கி, தன்னுடன் ஒரு பயணத்தைத் தொடங்க அகில உலகத் திருஅவைக்குத் திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுத்துள்ளார். இதனையொட்டி, சமீபத்தில் ஒளிபரப்பப் பட்ட 'இல்லம் சார்ந்த கத்தோலிக்கர் (*Catholics at Home*) நிகழ்ச்சியில் உரையாற்றிய பினாங்கு மறைமாவட்டத்தின் ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள், 2023க்குப் பின் மலர உள்ள 'ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது' என்னும் மூன்றையும் உள்ளடக்கிய 'ஒன்றித்த திருஅவை' என்பதன் பொருள் பற்றி, மலேசியா, புருணை மற்றும் சிங்கப்பூர் வட்டார திருஅவையின் தலைவர் நிலையில் தெளிவுப்படுத்தினார்.

திருத்தந்தை பிரான்சிஸ் 'என்னுடன் இணைந்து நடங்கள்' என்று இந்த ஆயர் மாமன்றத்தை கூட்டுகிறார். அதற்குமுன் உலகெங்கும் அடிமட்ட நிலையில் உள்ள அனைத்து பொதுநிலையினர், பணியாளர்கள் ஆகியோரின் உணர்வுகள், தேவைகள், ஆலோசனைகள் ஆகியவற்றுக்குச் செவிமடுத்து, எதிர்கால திருஅவைக்கான பயணத்தைத் திட்டமிட திருத்தந்தை விரும்புகிறார் என்று, ஆயர் அவரது உரையில் தெளிவுப்படுத்தினார்.

தொடர்ந்து, திருத்தந்தை பத்து கருப்பொருள் தலைப்புகளில் பொது நிலையனரோடு செவிமடுத்தலின் தன்மை, உண்மைக்குக் குரல் கொடுக்கும் தேவை, அறச்செயல்கள், கிறிஸ்தவ ஒன்றிப்பு மற்றும் பங்கேற்கும் திருஅவையாகத் திகழ தேவையான உருமாற்றும் பயிற்சிகள் குறித்து அறிந்துணர உள்ளார் என்றும் ஆயர் அவரதுரையில் தெளிவுப்படுத்தினார்.

ஆயர் செபஸ்தியன் அவர்களின் ஆயர் மாமன்றத்தைக் குறித்த முழு உரையை https://youtube.com/watchv=cDLsNF8XGBk வலைத்தலக் காணொளியில் காணலாம்.

# அக்டோபர் 10 - உலக மரணதண்டனை எதிர்ப்பு தினம்

கைதியின் முகம் முழுமையாக மூடப்பட்ட நிலையில், நெம்புகோல் இழுக்கப்படுகிறது. வெறும் 15 வினாடிகளில் அவன்/அவன் உயிர் பிரிகிறது. அரை மணி நேரம் கழித்து, மருத்துவர் அவர் இறந்துவிட்டார் என்பதை உறுதி செய்கிறார். ஒரு மனிதர் அரசால் கொல்லப்படுகிறார். இறப்பு வரிசையில் மனிதாபிமானமற்ற சூழ்நிலையில் நீண்ட காலமாக சிறையில் அடைக்கப்படுவதற்காக வரி செலுத்துவோரின் பணமும் விரையமாகிறது.

இன்று அக்டோபர் 10, உலக மரணதண்டனை எதிர்ப்பு தினம் நினைவூட்டப்படுகிறது. கத்தோலிக்கத் திருஅவையில் மரணத்தண்டனை குறித்துச், சமீபகாலமாக சிறிது சிறிதாக அதன் மறைக்கல்வி போதனையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகிறது. கடந்த 2018-ல் திருத்தந்தை பிரான்சிஸ், இது பற்றிய நல்லதொரு அறிவிப்பை செய்தார். இதன் வழி அனைத்து அரசாங்கத்தையும் கிறிஸ்தவர்களையும் மரணத்தண்டனையை கைவிடும்படி வேண்டினார்.

'மனித வாழ்க்கை புனிதமானது. அதன் ஆரம்பத்திலிருந்தே அது கடவுளின் ஆக்கப்பூர்வமான செயலை உள்ளடக்கியதோடு, அதன் படைப்பாளராகிய கடவுளுடன் சிறப்பு உறவைக் கொண்டிருக்கிறது.' (*கத்தோலிக்க மறைக்கல்வி நூல், எண் 2258*). ஒவ்வொரு மனிதரும் கடவுளின் உருவில் படைக்கப்பட்டவன் (தொ.நூ. 1 : 2 7) ஒருவரது வாழ்வின் முடிவைத் தீர்மானிப்பவர் கடவுள் ஒருவரே. மரண தண்டனை என்பது மனிதனின் உள்ளார்ந்த கண்ணியத்தையும், மனித வாழ்வுக்குக் கடவுள் கொடுத்த மாட்சியையும் வெறுமனே புறக்கணிக்கிறது.

நிச்சயமாக, குற்றம் சாட்டப்பட்டவர் இன்னும் நியாயமாக விசாரிக்கப்பட வேண்டும், பின்னர் விடுவிக்கப்பட வேண்டும் அல்லது நியாயமாக தண்டிக்கப்பட வேண்டும். குற்றவாளி செய்ததை நாம் நியாயப்படுத்தவில்லை. எந்தவொரு தண்டனையும் குற்றத்திற்கு ஏற்ப இருக்க வேண்டும். இருப்பினும், ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு, தூக்கிலிடப்பட்டால், அது ஒரு கொலையாளியைக் கொல்வதாகும். கொல்வது தவறு என்று ஒரு அரசு வலியுறுத்தினால், அரசு நிறைவேற்றும் மரணத்தண்டனையும் ஒரு கொலைதான்.

நீதி நிர்வாகமானது எப்போதும் மனிதர்களை உள்ளடக்கியது. அவர்கள் காவல் துறையினராக, பிற சட்ட அமலாக்க பணியாளர்களாக, வழக்கறிஞர்களாக ஏன், நீதிபதிகளாகவும் இருக்கலாம். மனிதராக இருப்பதால், ஒருவர் தவறிழைக்க இயலாது என்பதல்ல. எந்தவொரு நிரபராதிக்கும் தவறாக மரண தண்டனை விதிக்கப்பட்டு அதன் பிறகு தூக்கிலிடப்படுவதை நாம் ஆதரிக்கவில்லை. இத்துறையில் நீதி தவறும் சாத்தியம் அதிகம் உள்ளது. உலகின் பல்வேறு பகுதிகளில் பல சந்தர்ப்பங்களில் தவறான மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இத்தகையச் சூழலில், தவறான



தீர்ப்புக்குப்பின் தவற்றை உணரும் வேளையில், இறந்தவர்களை உயிர்ப்பிக்க முடியாது. மரணத்தண்டனை நிறைவேற்றப்பட்டபின், எந்தவொரு மன்னிப்பும் அல்லது இழப்பீடும் இழந்த உயிருக்கு ஈடு செய்ய இயலாது. நீதி என்ற பெயரில் அநீதி இழைக்க இடமில்லை.

மலேசியாவில், பெரும்பாலான வழக்குகளில் கொலை, ஆபத்தான போதைப் பொருள் வைத்திருத்தல்/கடத்தல் ஆகியவற்றுக்காக மரண தண்டனை விதிக்கப்படுகிறது. சில நேரங்களில், புலனாய்வாளர்களுக்கு அல்லது வழக்கறிஞர்களுக்கு உண்மையான காரணங்கள் சிக்காத வேளையில், கைதானவர்களைத் தடுத்து வைக்கப்படும் போது அவர்களும், தங்களுக்கு ஒருவேளை நீதி புறக்கணிக்கப்படலாம் என்ற நரக வேதனைக்குள்ளாகிறார்கள். பல சந்தர்ப்பங்களில் உயர் நீதிமன்றங்கள் கீழ் நீதிமன்றங்களின் முடிவுகளை ரத்து செய்துள்ளதை நாம் பார்த்துள்ளோம். இதனால், குற்றம் சாட்டப்பட்டவர் தூக்கில் இருந்து தப்பிக்கிறார் அல்லது தண்டனை நிறைவேற்றியப்படுகிறார். இது மனிதத் தீர்ப்புகளின் தெளிவற்ற தீர்ப்புகளுக்கு எடுத்துக்காட்டுகளாக அமைகின்றது. விசாரணையின் போது மனித பலவீனங்களுக்கும் இடமுண்டு என்பதை மறுக்க இயலாது. 2014-ஆம் ஆண்டில், யாஹ்யா உசேன் மொஹ்சென் அப்துல்ராப், வயது 31, சபாவில் உள்ள தவாவ் உயர் நீதிமன்றத்தால் தூக்குத்தண்டனைக்குத் தீர்ப்பிடப்பட்டார். பின்னர், குற்றவாளியால், மற்றொரு வழக்கறிஞரைப் பெற முடிந்தது. 2020-ல் தொடர்ந்த விசாரனையில், மேல்முறையீட்டு நீதிமன்றம் அவரது தூக்குத் தண்டனையை ரத்து செய்தது. யஹ்யாவால், ஒரு திறமையான வழக்கறிஞரைக் கொண்டு வாதாட முடிந்தது. அவர் உயிர்பிழைத்தார். ஆனால், வறுமை மற்றும் பிற காரணங்களால் மேல்முறையீட்டை தொடர இயலாதவர்களின் திக்கற்றவர்களின் நிலை என்னவாகும்?

இவ்வாறு மரணத்தண்டனைக்கு ஆளானவர்களின் குடும்பங்களும் பிள்ளைகளும் வறுமைக்குப் பலியாகிறார்கள். ஒருவர் மரண தண்டனைக்குத் தீர்ப்பிடப்பட்டு, தூக்கிலிடப்படுவதால் அவரது குழந்தைகளுக்கு என்ன பயன்? குழந்தைகளுக்கும் மாண்புடன் உலகில் வாழ உரிமை உண்டு அல்லவா?

ஒருமுறை விபச்சாரத்தில் பிடிப்பட்ட ஒரு பெண்ணை இயேசுமுன் நிறுத்தினார்கள் 'யோவான், அதி. 8). லேவியர் 20:10-ல் உள்ளபடி அவள் கல்லால் எறிந்து கொல்லப்படவேண்டும். ஆனால், இயேசுவின் பதிலோ அப்பெண்ணுக்கு மறுவாழ்வு அளிப்பதாக இருந்தது. "நானும் தீர்ப்பு அளிக்கவில்லை. நீர் போகலாம். இனிப் பாவம் செய்யாதீர்" என்று அந்த பெண்ணிடம் கூறினர். உயிரை பறிக்கும் உரிமை கடவுளுக்கு மட்டுமே உள்ளது. அந்தப் பெண் தொடக்கத்தில் கடவுள் கொடுத்த மாண்பை மீண்டும் பெற்றார்.

'அச்சமும் மனக்கசப்பும் சமுதாயத்தில் குணப்படுத்துதல் மற்றும் மறு ஒருங்கிணைப்பு செயல்முறையின் ஒரு பகுதியாக இருப்பதை விட, பழிவாங்கும் மற்றும் கொடூரமான முறையில் தண்டனையை எளிதாகப் பார்க்க வழிவகுக்கும்' என திருத்தந்தை *Fratelli tutti*, அதாவது, 'அனைத்து சகோதர சகோதரிகளே' எனும் மறைத்தூது மடலில் மிகப்பெரிய அழுத்தமான, மறுக்கமுடியாத ஆதாரங்களுடன், ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டாலும், ஒவ்வொரு நபருக்கும் தன்னைத் தற்காக்க இரண்டாவது வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்கிறார்.

கடவுளின் அருளால் ஒரு குற்றவாளி மனந்திரும்புவதற்கு சாத்தியமுண்டு. ஒரு குற்றவாளி மனமாறலாம். ஆனால், மரண தண்டனை இதற்கு வாய்ப்பளிப்ப தில்லை. மேலும், பழிவாங்கும் நடவடிக் கையாகவும் தோன்றுகிறது. இவ்வாறு தீர்ப்பளிக்கப்படுவது, பாதிக்கப்பட்டவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எந்த வகையில் நியாயமாக அமைகிறது? அல்லது சமூகத்தைப் பாதுகாக்கிறது?

அனைத்து அரசுகளும் மரண தண்டனை தொடர்பான கொள்கைகளை மாற்றி வருகின்றன. மலேசியாவில், அதை ஒழிக்க எந்த அரசியல் கட்சியும் ஆர்வம் காட்டுவதாகத் தோன்றவில்லை.

மாநில அரசை அல்லது நடுவன் அரசைக் குறை கூறுவது எளிது. நாம்தான் ஓர் அரசாங்கத்தைத் தேர்வுச் செய்கிறோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். சட்டங்கள் இயற்றப்படுவதற்கும் அவற்றின் அமலாக்கத்திற்கும் நாடாளுமன்ற அங்கத்தினர்களே பொறுப்பேற்க வேண்டும். ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை வாக்களிப்பது மட்டுமே மக்களளாட்சி அல்ல. மரண தண்டனை மற்றும் வேறு எந்த அநியாயச் சட்டங்களும் ஒழிக்கப்படுவதை உறுதி செய்வதற்கு நமக்கும் ஆராய்ந்து தேவையானவற்றைச் செய்ய வேண்டிய கடமை உள்ளது.

உண்மையில் திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவதுபோல், ஆயுள் தண்டனையும் ஒரு "இரகசிய" மரண தண்டனைதான். மரண தண்டனையை ஒழிக்க அனைத்து கிறிஸ்தவர்களுக்குத் திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுத்துள்ளார். அதுதான் நமக்கான அழைப்பு. நமது நோக்கம். கடவுளின் பொருட்டும், மனுக்குலத்தின் மனித நேயத்தை பொருட்டும்: கொலை செய்வதை நிறுத்த வேண்டும்.

*Charles Hector, மலேசிய மரணத்தண்டனை எதிர்ப்பு இயக்கத்தின் நிறுவனர். (தமிழாக்கம், ஆர்.கே.)*

## நிலைவாழ்வுக்கு உயிருள்ள வார்த்தை உணவாகிறது

இன்று ஆண்டின் 28-ம் ஞாயிறுவில் இணைந்துள்ளோம். இளம் அரசர் சாலமோன், கடவுளிடம் ஞானத்தைக் கேட்டுப் பெற்றதை இன்றைய முதல் வாசகத்தில் அறிகிறோம். சொத்துச் சுகத்தை விட கிடைத்த ஞானம் குறித்து சாலமோன் மகிழ்ச்சி கொள்கிறார். "ஞானத்தின் ஆவி என்மீது பொழியப்பட்டது. செங்கோலுக்கும் அரியணைக்கும் மேலாக அதை விரும்பி தேர்ந்தேன்" (சாஞா.7:7-8) என சாலமோன் அக்களிக்கிறார்.

இன்றைய நற்செய்தியிலும் இதே மாதிரியான நிகழ்வைக் காண்கிறோம். "நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்" (மாற்கு10:17) என்று இயேசுவை கேட்கிறார், ஓர் இளம் செல்வந்தர். இவரும் கடவுளின் கட்டளைகளைக் கருத்தாய் கடைப்பிடித்து வந்தார். சாலமோன் மன்றாடிய அதே ஞானத்தையே நம்பிக்கையாளரான இந்த இளைஞனும் விரும்பினார். சாலமோனுக்கும் இவருக்கும் அதிக ஏறுபாடு ஒன்றுமில்லை. இரக்கமுள்ள கடவுள் சாலமோன் மன்றாட்டை ஏற்று அருளினார். ஆனால் நற்செய்தியில் வரும் இளைஞனின் மன்றாட்டு நிராகரிக்கப்பட்டது. அது ஏன்?

நற்செய்தியில் வரும் இளைஞனைப் போல் இன்று நாமும் இருக்கிறோம். நமது மன்றாட்டையும் கடவுள் கண்ணோக்குவதில்லை எனப் புலம்புகிறோம். ஆறு நாள்கள் ஆழ்ந்து சிந்தித்து கடவுள் படைத்தப் படைப்புகளை இன்று நாம் கிஞ்சிற்றும் பொருட்படுத்தாமல், 'பயன்படுத்தியப் பின் வீசும்' கலாச்சாரத்தைப் பின்பற்றி வருகிறோம். மை பேனா பயன்படுத்தப்பட்டது அன்று, இன்று மை தீர்ந்து போனதும் வீசி எறியும் பால்பேனாவை (ball-point pen) பயன்படுத்துகிறோம். கைக்குட்டைக்குப் பதில் வீசி எறியும் காகிதக் கைக்குட்டையை (tissue Paper)) பயன்படுத்துகிறோம். ஆதாயம் தேடும் முதலாளித்துவச் சமுதாயத்தில் அனைத்துமே பணமாக மாறிவிட்டது. வாழ்வின் ஆதாரம் மாறிவிட்டது. இவற்றையெல்லாம் காலத்தின் தேவை, நாகரீகத்தின் வளர்ச்சி என கூறலாம். நிலைவாழ்வை தேடும் எண்ணம் இருந்தும், அதனை உண்மை மனதோடு தேடும் எண்ணம் இல்லை. உடைமைகள் (சொத்துகள்) மீது மனமும் கவனமும் வைத்திருக்கிறோம்.

இயேசு அழைத்தப் போது அனைத்தையும் விட்டுச்சென்று வரலாற்றில் பெயர் பொறிக்கப்பட்ட திருத்தூதர்களைப் போல் நமது வாழ்வும் உள்ளதா? சொத்துக்கள் மேல் அளவுக்கு அதிகமாக நாட்டம் வைக்கக்கூடாது. வேலை, பதவி, பட்டம், அந்தஸ்து முதலியவை சொத்துகளில் அடங்கும். இவற்றின் மீது நாம் வைத்திருக்கும் மோகம், இறையழைப்பை நாம் உணராமல் தடுத்துவிடுகிறது. அனைத்துக்கும் மேலாக நாம் கணக்குக் கொடுப்பதற்கு வேண்டிய ஓரே சொத்து 'உயிருள்ள கடவுள் வார்த்தை' (எபி.4:12) என புனித பவுல் இரண்டாம் வாசகத்தில் தெளிவுறக் கூறுகிறார். உயிருள்ள வார்த்தையை ஏற்று அதன்படி வாழ முயற்சிப்போம்.

"கிறிஸ்துவின் மறைவுடலான திருஅவையின் போதனையின்படி வாழ்ந்து காட்டி, விண்ணக வாழ்வைச் சொந்தமாக்கிக் கொள்வோம்.

*அந்தோணி இன்னாசி*
*ஸ்ரீ கெம்பாஙான்*

### பொதுக்காலம் 28-ஆம் ஞாயிறு

| | |
|---|---|
| 1-ம் வாசகம்: | சா.ஞா 7:7-11 |
| தி. பாடல்: | 90: 12-13. 14-15. 16-17 |
| 2ம் வாசகம்: | எபி 4: 12-13 |
| நற்செய்தி: | மாற்கு 10: 17-30 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை -வாரம் 4**